பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 03 திங்கட்கிழமை (19-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 258

# சயனைட் உட்கொண்டு 12 ஈழத் தமிழர் மரணம்!

## கர்நாடகத்தில் சம்பவம்

சென்னை, ஆக. 19

கர்நாடக மாநிலம் மாண்டியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு இந்தியப் பொலீஸார் நடத்திய தேடுதலின் போது விடுதலைப் புலிகள் என்று சந்தேகிக்கப்படும் பன்னிரண்டு ஈழத் தமிழர்கள் சயனைட் வில்லைகளை அருந்தி மரணமானார்கள்.

சயனைட் அருந்திய மேலும் ஐவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மொட்டிக்கி என்ற கிராமத்தில் ஆறு பேரும் வேரூட்டி கிராமத்தில் ஆறு பேருமாக 12 பேர் தற்கொலை செய்து கொண்டனர்.

மேலும் மொட்டிக்கி கிராமத்தில் 3 பேரும் வேரூட்டி கிராமத்தில் 2 பேரும் சயனைட் உட்கொண்ட நிலையில் பெங்களூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டனர் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட ஐவர் ஜெயா, சசி, அற்புதன், தேவர், நிர்மலன் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூவர் உடல் ஊனமுற்றவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை இனப்போரில் இவர்கள் கலந்து கொண்டதால் தங்கள் உடல் உறுப்புக்களை இழந்திருக்கக் கூடும் என்றும் கருதப்படுகிறது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, கர்நாடக மாநிலத்தில் சம்பந்தப்பட்ட

[4 ஆம் பக்கம் பார்க்க]

### மண்எண்ணெய் எடுத்துவர அனுமதி

வவுனியா, ஆக. 19

வவுனியாவில் இருந்து வடக்கே வரும் ஒருவர் 5 லீற்றர் மண்ணெண்ணெய் எடுத்து வர படையினர் அனுமதிக்கின்றனர்.

ஆனால் திங்கட்கிழமைகளில் மட்டுமே இந்த அனுமதி வழங்கப்படுகிறது.

(இ-164)

புலிகளின் பிடியிலிருந்து

## 3 மாதத்தினுள் வடக்கை இராணுவம் விடுவிக்குமாம்!

### ஹமில்டனின் நம்பிக்கை இது!!

கொழும்பு, ஆக. 19

வடக்கு மாகாணம் முழுவதையும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்க மூன்று மாதங்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனிஙக கூறியிருக்கிறார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

வடமாகாணத்தில் போர் முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு முகாமை அரசுப் படையினர் மீண்டும் கைப்பற்றியதால், மக்களிடம் தாம் கொண்டிருந்த பிடியை விடுதலைப் புலிகளின் தலைமை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## போராளிகள் தமது தளமாக கச்சதீவை பயன்படுத்தலாம்!

### இலங்கை அரசு அச்சம்

கொழும்பு, ஆக. 19

கச்சதீவைப் போராளிகள் தங்களின் தளமாகப் பயன்படுத்தும் வாய்ப்பு உள்ளது. அதனால் தான் அத்தீவை இந்திய-இலங்கை மீனவர்கள் பயன்படுத்த அனுமதிக்கப் போவது இல்லை என்று இலங்கை அரசு அறிவித்திருக்கிறது.

இலங்கையில் அமைதி திரும்பும் வரை இருநாட்டு மீனவர்களும் கச்சதீவைப் பயன்படுத்த அனுமதிக்கப் போவதில்லை என்று இலங்கை அரசு அறிவித்திருப்பதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

(உ-எ)

ராஜீவ் கொலை விவகாரம்:

## இலங்கைச் சுவாமியாரின் ஆசிரமம் கண்காணிப்பு

சென்னை, ஆக. 19

திருச்சிக்கு அருகே உள்ள மாத்தளை சுவாமியார் (இலங்கைச் சாமியார்) என அழைக்கப்படும் சுவாமி பிரேமானந்தாவின் ஆசிரமத்தை மத்திய புலனாய்வுப் பிரிவினர் (சி. பி. ஐ.) இரகசியமான முறையில் கண்காணித்து வருகின்றனர்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகத் தேடப்படும் ஒற்றைக்கண் சிவராசன், கொலை நடப்பதற்கு முன் சுவாமி பிரேமானந்தர்விடம் வந்து ஆசிபெற்றுச் சென்றார் என்றும்—

கொலைக்குப் பின்னர் சிவராசன் ஆசிரமத்தின் ஒரு குடிவில் மாறு வேடத்தில் தங்கியிருந்ததாகவும்— செய்திகள் வெளியானதைத் தொடர்ந்தே ஆசிரமத்தை சி. பி. ஐயினர் கண்காணித்து வருகின்றனர்.

ஆனால் சுவாமியாரை இது வரை அவர்கள் விசாரிக்க

[4 ஆம் பக்கம் பார்க்க]

இராணுவத் தாக்குதலில் இருந்து

## மயிரிழையில் உயிர்தப்பிய வெளிநாட்டுச் செய்தியாளர்

யாழ்ப்பாணம், ஆக. 19

வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவர் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பினார்.

''ஏசியா வீக்'' சஞ்சிகையின் விசேட செய்தியாளர் ஒருவர் கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தின் அனுமதி பெற்று வடக்கே வந்தார்.

வவுனியாவில் இருந்து மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் வர உத்தேசித்த அவர் வவுனியாவின் எல்லைப் பகுதியில் பாதையை மாறவிட்டுவிட்டார்.

அவர் மாறிச் சென்ற வழியில் இராணுவ முகாம் ஒன்று இருந்தது. மோட்டார் சைக்கிளில் அவர் தூரத்தே வருவதைக் கண்ட இராணுவத்தினர் கடுமையான துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். எனினும் அவர் மோட்டார் சைக்கிளில் இருந்து பாய்ந்து

[4 ஆம் பக்கம் பார்க்க]

### வெற்றிலைக்கேணியில் மேலும் ஒரு கப்பல்

தாளையடி, ஆக. 19

வெற்றிலைக்கேணி கடற்பிரதேசத்தில் மற்றும் ஒரு பாரிய கடற்படை கப்பல் தற்போது தரித்து நிற்கின்றது. வெற்றிலைக்கேணிப் பகுதியில் படையினர் தரையிறக்கப்பட்டதையடுத்து இதுவரை ஒரு பாரிய கப்பல் மட்டுமே அப்பகுதியில் தரித்து நின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

(த-144)

### ஆனையிறவில் மோதல்

கொழும்பு, ஆக. 19

முள்ளியானுக்கும் ஆனையிறவுக்கும் இடையேயான பிரதேசத்தில் விடுதலைப் புலிகளுக்கும் அரசு படையினருக்கும் இடையே நேற்று மோதல் இடம்பெற்றதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-எ)

### முல்லை. வங்கி வவுனியாவில்

யாழ்ப்பாணம், ஆக. 19

இலங்கை வங்கியின் முல்லைத்தீவுக்கிளையின் ஆவணங்களை வவுனியாவுக்கு எடுத்துச் சென்று அங்கு வங்கியை இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூட்டுப்படை தலைமையக அதிகாரிகள் முல்லைத்தீவு அரச அதிபருக்கு அறிவித்துள்ளனர்.

இதேசமயம், முல்லைத்தீவு மக்கள் வங்கிக்கிளை, செயலகம் ஆகியவற்றின் முழு ஆவணங்களும் நாசமாகி விட்டதாக தமக்கு தகவல் கிடைத்திருக்கின்றது என அந்த அதிகாரிகள் அரச அதிபருக்கு தெரியப்படுத்தியுள்ளனராம்!

(உ-3)

## கிட்டு நாடு திரும்புவதற்கு தடை எதுவும் இல்லையாம்

### அமைச்சர் ரணில் கூறுகிறார்

கொழும்பு ஆக. 19

ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் லண்டனுக்குச் சென்று கிட்டுவுடன் பேசத் தேவையில்லை. கிட்டு கொழும்புக்கே வரப் போகிறார். அவரை வரவேற்க எமது நாட்டுச் சட்டம் தயாராக இருக்கிறது.

மந்திரி சபைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்க வியாழனன்று பத்திரிகையாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பத்திரிகையாளர்:- கிட்டு கொழும்பு வருவார் என்றா சொல்கிறீர்கள்?

அமைச்சர்:- பிரிட்டன்

[4 ஆம் பக்கம் பார்க்க]

வடக்கே வரும் பயணிகளுக்கு

## வவுனியா ரயில் நிலையத்தில் தற்போது சோதனை இல்லை

வவுனியா, ஆக. 19

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரும் பயணிகள் வவுனியா ரயில் நிலையத்தில் தற்போது சோதனை செய்யப்படுவதில்லை. வவுனியாப் பயணிகள் மட்டுமே சோதனையிடப்படுகிறார்கள்.

கடந்த புதன்கிழமை முதல் இந்த நடைமுறை அமுலில் இருந்து வருகிறது. பயணிகள் தாண்டிக்குளத்தில் வைத்தே சோதனையிடப்படுகிறார்கள்.

அத்துடன் பயணிகள் விவகாரத்தில் மற்றும் ஒரு மாற்றமும் செய்யப்படுகிறது. தாண்டிக்குளம் சோதனையின் பின்னர் பயணிகள் சாந்த சோலைச் சந்தி வரை வாகனங்களில் ஏற்றிக் கொண்டு வந்து விடப்படுகிறார்கள்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## படையினர் வீடுடைத்து கொள்ளையிட்டனர்!

### உடுத்துறையில் தப்பியவர் தகவல்

தாளையடி, ஆக. 19

''ஆழியவளை, உடுத்துறைப் பகுதிகளில் மக்கள் தமது வீடுகளில் விட்டுவிட்டு வந்த பொருள்களை இராணுவத்தினர் வீடு உடைத்து, எடுத்து உழவு இயந்திரங்களில் ஏற்றிச் செல்கிறார்கள். அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகளைக் கூடக் கழற்றி ஏற்றிச் செல்கிறார்கள்.

என்னைப் பிடித்து பலவிதமாகத் துன்புறுத்திய பின், பொருள்களை ஏற்றிச் செல்லும் உழவு இயந்திரத்திலேயே என் கைகளைக் கட்டிப் போட்டார்கள். பின்னர் அதிலிருந்து தாக்கி வீசினார்கள்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aayanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### காணவில்லை

பத்திரிகைக் கடதாசியால் சுற்றப்பட்ட படச்சுருள் (நெகட்டிவ்) ஒன்று 16-8-91 வெள்ளியன்று யாழ்ப்பாணத்திலிருந்து கொட்டடி ஊடாக மானிப்பாய் வீதியால் செல்லும் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (17841)

### வானொலி நாடகம்

வானொலி நாடகம் எழுதிப் பழக வேண்டுமா? 172 வானொலி நாடகங்களை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்களை வாசியுங்கள். கெட்டிக்காரர்கள் 25/-, முதலாம்பிள்ளை 30/-. மாணவர்களும், படிப்பதற்கும், நடிப்பதற்கும் ஏற்றவை. (17839)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைகாலவியல் சூதகக்குத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (4818)

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். (4241)

---

**BITSMANS**
**INSTITUTES**
MANIPAY.

A/L 92

தூய கணிதம் [வட்டம்]

பிரயோக கணிதம் [காவிகள்]

ஆசிரியர்:
திரு. கமலசிங்கம் B. Sc. (Hons)

ஆரம்பம்:
**19 - 08 - 1991**
Mon. 4-00 p.m.

[சி-0295]

---

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

**சித்த மருத்துவப் பிரிவிற்கு 1990/91 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை**

## அனுமதித்தல்

மேற்குறிப்பிட்ட முன்னைய விளம்பரம் தொடர்பாக விண்ணப்பம் யாவும் 21-09-1991 வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

-பதிவாளர்.

(சி/0368)

---

# DIPLOMA IN NURSING

## தாதியர் பயிற்சி நெறி

**புதிய பிரிவுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**

- ★ பதிவுகளுக்கு முந்துங்கள்
- ★ G. C. E. சாதாரணதரத்துடன் பிரத்தியேக ஆங்கில, பார்மஸி வகுப்புக்கள் அடங்கிய பயிற்சி நெறி.
- ★ பிரபல தகுதி வாய்ந்த விரிவுரையாளர்கள் குழு.

விவரங்களுக்கு:

**வட. இலங்கை**
**தொழில் நுட்பக் கல்லூரி,**
**(NORTH CEYLON TECHNICAL INSTITUTE)**
14, St. Peters Lane, Jaffna.

[சி-0291]

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 06 — 01 — 1936

மறைவு: 30 — 08 — 1990

திருமதி
### திருநாவுக்கரசு புஸ்பவதி
(இராசமணி)

திதி: 19 - 08 - 1991

அன்புடனும் பாசத்துடனும்
எமை வளர்த்த அன்னையே!
ஆண்டொன்று சென்றாலும்
ஆறாது உம் நினைவு எம் மனதில்.

- குடும்பத்தினர்.

''புஷ்ப வாசா'',
கே. கே. எஸ். வீதி.
வல்வெட்டித்துறை.

[17798]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 27 — 07 — 1934

மறைவு: 20 — 08 — 1990

அமரர்
### மனவல் டொமினிக் (வாஸ்)

ஓராண்டு ஓடி மறைந்தாலும்
நினைவில் இருந்து நீங்காது உன் உருவம்
பாழும் விதியென்று பலரும் மொழிந்தாலும்
நாளும் உருகியே நலிகின்றோம் நினைவாலே
மனைவி - மக்களும் - பிறந்த சோதரரும்
மற்றும் உன் நண்பரும்
கண்ணீரும் வற்றியே கல்லாகி விட்டனரே
வாஸ்! வாஸ்!! என்று குமுறியழுதாலும்
மீண்டும் வரமாட்டாய்! என் செய்வோம்!!
ஆண்டவனை வேண்டியே அஞ்சலி செய்கின்றோம்
ஆத்ம சாந்திக்காக ஆண்டொன்றாய் நாமிங்கு.

-நண்பன்

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எதிர்வரும் 20-08-91 செவ்வாய்க்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ். பரிசுத்த கார்மேல் மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

(17495)

---

## பணவீக்கம் 11.6 சதவீதம்

நாட்டின் பணவீக்கம் கடந்த மாதம் 11.6 சத வீதமாக இருந்தது என்று மத்திய வங்கி ஆளுநர் டாக்டர் எச். என். எஸ். கருணாதிலக தெரிவித்திருக்கிறார்.

வேலை இல்லாத் திண்டாட்டம் பத்துச் சத வீதமாக இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

---

கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம் லங்கா சிமெந்து நிறுவனக் கிளை - காங்கேசன்துறை

## நிர்வாகசபை, பகுதிப் பிரதிநிதிகள் கூட்டம்

மேற்படி தொழிற் சங்கத்தின் பகுதிப் பிரதிநிதிகள், நிர்வாகசபை உறுப்பினர்களின் கூட்டம் 21-8-91 புதன்கிழமை பி. ப. 2-00 மணிக்கு லங்கா சிமெந்து நிறுவன தற்காலிக கந்தோர், சுன்னாகத்தில் நடைபெறும். மிக முக்கியமான விடயங்கள் ஆராயப்பட இருப்பதால் சகல உறுப்பினர்களும் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வ. ராதாகிருஷ்ணன்,
தலைவர்.

வை. சுரேஸ்,
பதில் செயலாளர்

(17835)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 11 — 04 — 1906

மறைவு: 30 — 08 — 1990

### திருமதி துரையப்பா கனகம்மா
(ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணை)

திதி: 20 — 08 — 1991

20-08-1991 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

மட்டுவில் தெற்கு.
சாவகச்சேரி.

[17822]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 19 — 10 — 1917

உதிர்வு: 20 — 07 — 1991

திருமதி
### முருகப்பர் சின்னப்பிள்ளை

நாம் வாழ வழிகாட்டி அன்பால், பண்பால் எங்களை நல்வழி நடத்தி கலங்கரை விளக்காய் ஒளி தந்து வாழ வைத்த எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய நீங்கள் வணங்கும் எல்லாம் வல்ல கும்பிட்டான் விநாயகரை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

வரணி வடக்கு,
வரணி.

[17805]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உதயன்

### முல்லை. மக்களுக்கும் மேலும் சோதனை!

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல தமிழ் மாவட்டங்களிலும் உணவு மற்றும் பாவனைப் பொருள்களுக்குத் தட்டுப்பாடும் பற்றாக்குறையும் இப்போது சர்வ இயல்பானதாகிவிட்டன.

கடந்த வருடம் ஜூன் மாதம் யுத்தம் தொடங்கிய பின்னர்— உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில் அரசாங்கம் மக்களுக்குத் தேவையானவற்றில் பத்து முதல் இருபத்தைந்து சத விதமானவற்றை மட்டுமே அனுப்பிவந்தது. அதனால் தமிழ் மக்களில் பெரும்பாலானோர் ஒரு நாளைக்கு ஒருவேளை உணவு பெறுவது கூடக் கஷ்டமாயிற்று.

ஆகப் பிந்திய கட்டத்தில் நிவாரணப் பொருளும் இல்லை; விலைக்கு வாங்கவும் எதுவுமில்லை என்ற மிக மிக மோசமான பட்டினி நிலை உருவாகி இருக்கிறது. கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் பட்டினி நிலை மிகப் படுமோசமான கட்டத்துக்கு வந்திருக்கிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 60 வாரங்களுக்குப் பொதுவாக ஆறு வாரங்களே அரசின் உலர் உணவு நிவாரணம் மக்களுக்குக் கிடைத்திருக்கிறது. குறிப்பிட்ட 60 வாரங்களுக்கும் தேவையான உணவுப் பொருள்களில் தரை மார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாகவும் பத்துச் சதவீதமானவை மட்டுமே கிடைத்துள்ளன.

அதனால் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சம் மக்களும், கிழக்கில் இருந்து அகதிகளாக வந்து சேர்ந்த சுமார் பத்தாயிரம் மக்களும் தாமரைக் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு, பப்பாளிக்காய், பனங்காய் என்பவற்றை உட்கொண்டே உயிரைப் பிடித்து வைத்திருக்கிறார்கள்!

இன்னும் எத்தனை நாட்களுக்கு இவ்விதம் உயிரைக் காப்பாற்றுவது? பட்டினிச் சாவில் இருந்து தப்புவது?— என்று கேட்டு அவர்கள் கடந்த வாரம் பேரணி நடத்தினார்கள். இப்போது பட்டினிச் சாவை எதிர் நோக்கி வாழும் அதே முல்லைத்தீவு மக்களுக்கு மேலும் பேரிடி விழுந்திருக்கிறது!

கொழும்பில் இருந்து கிளிநொச்சிக்கும், முல்லைத்தீவுக்குமென பருத்தித்துறைக்குக் கப்பலில் அனுப்பி வைக்கப்பட்ட பொருள்களை வாகனங்களில் ஏற்றிச் செல்ல எரிபொருள் இல்லை!

இவ்வாறு எல்லா வகைகளாலும், சின்னச் சின்ன விடயங்களில் கூடத் தமிழர்களுக்குக் கஷ்டங்களையும், இன்னல்களையும், தொல்லைகளையும் கொடுப்பதையே அரசு தனது தொழிலாக, நோக்காகக் கொண்டிருக்கிறது. தமிழர்களின் உரிமைப் போராட்டம் தொடரும்வரை அரசின் இந்த நிலைப்பாடு மாறாது என்பதும் தெரிந்ததே.

அதேவேளை, தமிழர்களின் போராட்டமும் உரிமை கிட்டும் வரை ஓயப்போவதில்லை என்பதும் தெளிவு. ஆகையால் தமிழ் மக்கள் இனி ஒன்றைத் தான் அரசிடம் கூறலாம்.

நாங்கள் இலங்கையின் பிரசைகள் என்று கருதினால் எங்களுக்குச் சேரவேண்டியவற்றைத் தா! இல்லையேல் நாங்கள் எங்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு ஓர் அரசை அமைக்க விட்டுவிடு— என்று அரசாங்கத்திற்கு அழுத்தம் திருத்தமாகக் கூற வேண்டும். அதனைவிட வேறு பதில் மார்க்கம் எதுவும் இனி இருக்க முடியாது.

★ இந்திய மாநிலங்களில்

# புலிகளைத் தேடும் பொலீஸார் டாக்டருடன் செல்கின்றனராம்

பெங்களூர், ஆக. 19

விடுதலைப் புலிகளைத் தேடும் இந்திய பொலீஸ் சோதனைக் குழுவினர் தேடுதலின் போது, தம்முடன் டாக்டர்களையும் கூட்டிச் செல்கின்றனராம்.

இப்படி யு. என். ஐ. செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

கைதாவதைத் தவிர்க்க விடுதலைப்புலிகள் சயனைட் உட்கொண்டு உயிர் துறக்கும் முயற்சிகளை முறியடிக்கவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக கர்நாடக மாநிலத்தில் பொலீஸார் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது 12 விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டனர் என்றும் யு. என். ஐ. செய்தி தெரிவிக்கிறது.

கர்நாடகத்தில் பொலீஸார் நடத்திய மற்றும் ஒரு தேடுதலின் போது சயனைட் உட்கொண்ட 3 விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பெங்களூர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் என்றும், அங்கு அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் என்றும் யு. என். ஐ. செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## நாகராஜன் 30-ம் திகதி வரை காவலில்

சென்னை, ஆக. 19

''தராசு'' அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்வம் தொடர்பாக, கைதான மாநில முன்னாள் உள்துறைச் செயலாளர் ஆர். நாகராஜனை இம் மாதம் 30ஆம் திகதி வரை காவலில் வைக்கும்படி சென்னை நீதிமன்றம் உத்தர விட்டிருக்கிறது.

இதேவேளை- உடல்நலக் குறைவு காரணமாக தன்னை பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று கோரி திரு. நாகராஜன் தாக்கல் செய்த மனு இன்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் சென்னை நீதிமன்றம் அறிவித்திருக்கிறது. (இ-எ)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 19

கடந்த ஜூலை 21 ஆம் திகதியன்று கட்டைக்காட்டில் நடந்த மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளான அன்ரனி (வல்லிபுரம் பிரதாபன் — கல்வியங்காடு) ரவி (கனகசபை ரவீந்திரன்- புத்தூர்) ஆகிய இருவரும் வீரமரணமடைந்தனர், [உ]

## சிவராசனின் மறுபெயர்

கொழும்பு, ஆக. 19

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக இந்திய மத்திய புலனாய்வுப் பொலீஸாரினால் தேடப்பட்டு வரும் சிவராசனின் உண்மைப் பெயர் ராஜா அருமைநாயகம் என்று 'இந்தியா ருடே' சஞ்சிகை தெரிவித்திருக்கிறது.

மத்திய புலனாய்வுப் பொலீஸார் அசமந்தமாகச் செயற்பட்டதால் கொலையின் சூத்திரதாரி தப்பி விட்டார் என்றும் 'இந்தியா ருடே' சஞ்சிகையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

# ஈழத்தமிழரின் வீட்டில் தகவல் தொடர்பு சாதனம்

## சயனைட் அருந்த முயன்றவர் கைது

சென்னை, ஆக. 19

திருச்சி மாவட்டம் - கரூர் அருகே உள்ள செட்டிப் பாளையம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து சக்தி வாய்ந்த தகவல் தொடர்பு சாதனம் ஒன்றை பொலீஸார் கைப்பற்றினர்.

இலங்கைத் தமிழருக்குச் சொந்தமான அந்த வீட்டை பொலீஸார் முற்றுகையிட்ட சமயம் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் அத்தகவல் தொடர்பு சாதனத்தைப் பயன்படுத்தித் தகவல்களைப் பரிமாறிக்கொண்டிருந்தார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

அந்த இளைஞரின் பெயர் வரதன் என்றழைக்கப்படும் சங்கர் என்றும்—

அவருடன் அந்த வீட்டின் உரிமையாளரும், 35 வயதுப் பெண் ஒருவரும் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர் என்றும்—

பொலீஸாரைக் கண்டதும் அந்த இளைஞன் பொலீஸாரைக் கத்தியால் குத்த முயற்சித்தார் என்றும்—

பின்னர் சயனைட் வில்லையை உட்கொள்ள அந்த இளைஞர் முயற்சிக்கவே, அதனைப் பொலீஸார் முறியடித்து அவரைக் கைது செய்தனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களிடமிருந்து 22 பிராண்ட் ''வயலெஸ்'', சர்வதேச ஒலிபரப்புக்களை கேட்கக்கூடிய ஒரு ரேடியோ, 10 வெடிமருந்துக் குச்சிகள், 10 வெடிமருந்துக் கருவிகள், புலிகளின் முத்திரையுடன் கூடிய வெள்ளிக்காசுகளைச் செய்வதற்கான 75 அச்சுகள், மற்றும் 62 ஆயிரம் ரூபா இந்திய நோட்டுகள், துப்பாக்கி ரவைக்கான மருந்துகள் என்பன கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ-த)

# அமைச்சர் சிதம்பரத்துக்கு 'கறுப்புப் பூனை' பாதுகாப்பு

இந்திய மத்திய இணை அமைச்சர் ப. சிதம்பரத்துக்கு கறுப்புப் பூனைப் படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை திருச்சி மாவட்டம் - குண்டூருக்கு அருகில் வைத்து சிதம்பரம் குழுவினர் அ.தி.மு.க. தொண்டர்களினால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்தே மத்திய அரசு இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை — கடந்த சனிக்கிழமை தேவகோட்டைக்கு விஜயம் செய்த இணை அமைச்சர் ப. சிதம்பரத்துக்கு அ. தி. மு. க. தொண்டர்கள்கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

காவேரி நீர்ப்பங்கீடு தொடர்பான தகராறில் இணை அமைச்சர் சிதம்பரம் மத்திய அரசின் நிலைப்பாட்டை ஆதரித்ததற்காக அவர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளை அ. தி. மு. க. புறக்கணிக்கும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா ஏற்கனவே அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

குண்டூரில் வைத்து சிதம்பரம் குழுவினர் மீது அ.தி. மு. க. தொண்டர்கள் நடத்திய தாக்குதலில் 19 கார்கள் சேதமடைந்தன என்றும் 41 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

# இது ஒரு தன்மான யுத்தம்; மண்ணை மீட்க வாருங்கள்!

## புலிகள் பிரமுகர் அழைப்பு

''இன்று நடப்பது தன்மான யுத்தம். தமிழர்கள் இந்த நாட்டிலே வாழ்வதா இல்லை சாவதா என்பதை தீர்மானிக்கும் யுத்தம். இளைஞர், யுவதிகள் எனவே போராட்டக் களத்தில் குதித்து தமிழர்கள் தன்மானமாக வாழ, இம்மண்ணைக்காக்க முன் வாருங்கள்''

இவ்வாறு கடந்த வியாழக்கிழமை தென்மராட்சி சுல்வயல் பகுதியில் நடந்த போர்க்காலக் கருத்தரங்கில் உரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. பிரசாத் அறைகூவல் விடுத்தார்.

அவர் மேலும் பேசுகையில்—

ஆனையிறவுப் போரில் 8,000 இராணுவத்தினருக்கெதிராக ஒரு குறிக்கப்பட்டளவு போராளிகளே போரில் ஈடு பட்டனர். அவர்களின் மன உறுதியே 8,000 இராணுவத்தினருக்கு சமமாக ஈடு கொடுத்து 24 நாட்கள் போராட வழி செய்தது. மண்ணைக் காக்கும் கடமையில் காயமடைந்த போராளிகள் கூட, கட்டிய இழை அவிழ்ப்பதற்கு முன்னரே மீண்டும் களத்தில் குதித்தனர்.

முப்படைக்கும் எதிராக உங்கள் பிள்ளைகள் ஒரு மிகப் பெரிய யுத்தத்தைத் தொடுத்தனர். எமது போராளிகள் 24 மணி நேரமும் யுத்த களத்தைச் சந்தித்தனர். ஒரு நிமிடம் கூட கண்ணிமைகாது எதிரி எமது மண்ணைப் பறிக்கக்கூடிய நிலையில் 24 நாட்கள் போரிட்டனர் — என்றார்.

# சிதம்பரம் குழுவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் இல்லை

## ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை, ஆக. 19

மத்திய அமைச்சர்களான திரு. சிதம்பரம், திரு. அருணாசலம் ஆகியோருக்கு எதிராக கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் எதிலும் அ.தி.மு.கவினர் ஈடுபட மாட்டார்கள் என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தமது கட்சி எந்தப் போராட்டம் பற்றியும் அறிவிக்கவில்லை என்றும்—

ஆகவே கட்சித் தொண்டர்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும்—

இத்தகைய ஆர்ப்பாட்டங்களில் தமது கட்சிக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். [உ-த]

# பற்றறியுடன் வந்தோரின் உடைமைகள் பறிமுதல்!

## தாண்டிக்குள சோதனை தீவிரம்

வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு தடை செய்யப்பட்ட பொருள்களில் ஒன்றான ரோர்ச் பற்றறிகளை வைத்திருந்த மூவர் தாண்டிக்குளம் முகாம் சோதனையின் போது படையினரிடம் அகப்பட்டனர். பற்றறிகளைக் கண்டுபிடித்த படையினர் அவர்களின் முழு உடைமைகளையும் பறிமுதல் செய்தனர். கடந்த வியாழக்கிழமை இச் சம்பவம் இடம் பெற்றது.

இந்த மூவரில் ஒருவர் சோதனைக்கு முன்னரேயே, தமது சொந்தத் தேவைக்கு இரு பற்றறிகளை எடுத்துச் செல்வதாகப் படையினரிடம் தெரிவித்திருந்தாராம்.

அப்படி இருந்தும் அவரது சைக்கிள் உட்பட, சகல பொருள்களையும் படையினர் பறிமுதல் செய்தனர். ஆனால் பயணத்தைத் தொடர படையினர் அவரை அனுமதித்தனர்.

மற்றும் இருவரின் உடைமைகளும் இதேபோன்றே பறிமுதல் செய்யப்பட்டன. அத்துடன் மேலதிக விசாரணைக்காக அந்த இருவரும் படையினரால் தடுத்து வைக்கப்பட்டனர். (இ-164)




## நெஞ்சமே நாடு!

நெஞ்சமே நாடு நித்தமும் தேடு
அஞ்சுதல் அகற்றிடும் அருள்மிகு வீடு
(நெஞ்சமே……)

கந்தனின் கோயில் கருணையின் வாயில்
உந்தனுக்கு என்றும் உறுதுணை யாகும்
தந்திடும் அமைதி தொழுதிடும் போதில்
வந்திடும் நிறைவே வாழ்வினில் நிலையாய்
(நெஞ்சமே……)

— நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

## விஞ்ஞான பீட இரண்டாவது அரையாண்டுப் பரீட்சைகள் - 1990

1990 ஆம் ஆண்டிற்குரிய இரண்டாவது அரையாண்டுப் பரீட்சை 14-10-91இல் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகள் 15 - 09 - 91 இற்கு முன்பாக யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மேலதிக விவரங்களைப் பரீட்சைக் கிளைப் பிரதிப் பதிவாளரிடமிருந்து நேரடியாகவோ அல்லது சுயவிலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ.மீ.x10 செ மீ. அளவுடைய கடிதவுறையை அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

-பதிவாளர்.

(சி-0366)

## கிட்டு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
நாடு கடத்தினால் இங்கு வரத்தான் வேண்டும்.

**பத்திரிகையாளர்:-** அவரை வரவேற்பீர்களா?

**அமைச்சர்:-** அவரை வரவேற்க எமது நாட்டுச் சட்டம் தயாராக இருக்கிறது.

## இலங்கைச்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
வில்லை.

இது குறித்துச் சுவாமி பிரேமானந்தா தெரிவிக்கையில்—

மறைப்பதற்கோ அல்லது ஒளித்து வைப்பதற்கோ என்னிடம் ஒன்றுமில்லை. இந்த ஆசிரமம் திறந்த புத்தகம் மாதிரி. யார் வேண்டுமானாலும் தாராளமாக வந்து போகலாம்; தேவைப்பட்டால் சோதனையும் செய்யலாம்— என்று தெரிவித்தார். (அ)

## 3 மாதத்தினுள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
இழந்துவிட்டது.

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனை எமது இராணுவம் விரைவிலேயே உயிருடன் கண்டுபிடித்து கைது செய்யும்.

— இப்படி தளபதி வனசிங்கா அப்பேட்டியில் மேலும் நம்பிக்கை வெளியிட்டார்.

தளபதி ஹமில்டன் வனசிங்காவின் பதவிக்காலம் கடந்த 17 ஆம் திகதி முதல் மூன்று மாத காலத்துக்கு மட்டும் நீடிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

# St. John's College, Jaffna
# and
# Chundikuli Girl's College, Jaffna
# ADMISSION - 1992

1. பின்வரும் வகுப்புக்களில் மட்டும் வெற்றிடங்கள் உள்ளன.
   ஆண்டு ஒன்று, ஆண்டு ஆறு, ஆண்டு பத்து.
2. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 20 — 09 — 1991.
   (அ) விண்ணப்பப்படிவங்களை அவ்வக் கல்லூரிகளிலிருந்து 02-09-1991 முதல் 14-09-1991 வரை பெற்றுக் கொள்ளலாம்.
   (ஆ) எக்காரணம் கொண்டும் 14-09-1991க்குப் பின் விண்ணப்பப்படிவங்கள் கொடுக்கப்படமாட்டா.
   (இ) எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
   (ஈ) 20-09-1991க்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
3. விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இணைக்கப்பட வேண்டும். பிழையாகவோ அன்றி பூரணமாகவோ நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்படிவங்களை ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை அவ்வக் கல்லூரிகளில் படிவமொன்றிற்கு ரூபா 50/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
5. வயதெல்லைகள்:
   (அ) ஆண்டு ஒன்று -
   விண்ணப்பதாரி 01-02-1986 க்கும் 31-01-1987 க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   (ஆ) ஆண்டு ஆறு -
   விண்ணப்பதாரி 01-02-1981 இல் அல்லது அதற்கு பின் பிறந்திருத்தல் வேண்டும்.
   (இ) ஆண்டு பத்து -
   விண்ணப்பதாரி 01-02-1977 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
6. பிரவேசப் பரீட்சை -
   ஆண்டு ஆறு, ஆண்டு பத்து ஆகிய வகுப்புக்களுக்கு 19-10-1991 காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும்-

– அதிபர்கள்.

யாழ்ப்பாணம். [சி-0281]

## வவுனியா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
சாந்த சோலைச் சந்தியில் இருந்தே அவர்கள் நொச்சி மோட்டை நோக்கி தமது நடை பயணத்தை தற்போது ஆரம்பிக்கின்றனர்.

தாண்டிக்குளம் சோதனை முகாமுக்கும் சாந்த சோலை சந்திக்கும் இடையிலான தூரம் சுமார் முக்கால் மைல் ஆகும். (இ-எ)

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 1991 - 09 - 13 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**1. புவியியல் / சமஸ்கிருதம் / அரச அறிவியியலில் உதவி விரிவுரையாளர்**

சம்பள அளவுத் திட்டம்:

உதவி விரிவுரையாளர்:
ரூபா 3, 900/-
மாதமொன்றுக்கு
(நிலையானது)

(துறைத் தலைவரினாலும், பீடாதிபதியினாலும் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவரை விரிவுரையாளர் [தகுதிகாண்] என்ற பதவிப் பெயரில் நியமிக்கலாம் என்பதுடன் துணைவேந்தர் அவரை 4, 500/- ரூபா 10 x 200 - 6,500 (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத் திட்டத்தில் வைக்க முடியும்)

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களும் இதர விவரங்களும் இப்பல்கலைக்கழகத்தின் ஸ்தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும், இதர விவரங்களையும் பெற விரும்புபவர்கள் 23 x 10 சதம மீற்றர் அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியனவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

– பதிவாளர்.

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991 - 08 - 09

## படையினர் வீடுடைத்து...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
என்னைத் தாக்கும்போது மண்ணெண்ணையை வாயில் ஊற்றிக் குடிக்கச் சொன்னார்கள்''

ஆழியவளையில் உள்ள தமது வீட்டைப் பார்க்கச் சென்று இராணுவத்திடம் அகப்பட்டு, பலமாகத் தாக்கப்பட்ட நிலையில் திரும்பி, பளை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் வயிரவப்பிள்ளை வல்லிபுரம் (43 வயது) என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெற்றிலைக்கேணியில் இருந்து உடுத்துறை ஆழியவளைப் பக்கமாக வந்த இராணுவத்தினரிடம் இவர் கடந்த 9 ஆம் திகதி அகப்பட்டுக்கொண்டார்.

அவர் ஆஸ்பத்திரியில் வைத்துத் தமக்கு நேர்ந்த கதி குறித்து உதயனுக்குப் பின்வருமாறு தெரிவித்தார்:-

வீட்டைப் பார்த்துக் கொண்டு, பிள்ளைகளின் உடுப்புகளை எடுத்துக் வருவதற்காகவே நான் அங்கு சென்றேன். நான் வீட்டிற்குள் நின்ற சமயம் வெடிச் சத்தம் கேட்டு வெளியே வந்தேன். வீட்டிலிருந்து சுமார் 100 யார் தூரத்தில் நிலத்தில் படுத்திருந்த இரு சிப்பாய்கள் ஓடி வந்து என்னைப் பிடித்தனர். எனது கைகளைச் சேர்த்துக் கட்டிவிட்டு, சற்றுத் தொலைவில் நின்ற சுமார் 10 பேர் கொண்ட ஒரு குழுவிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் எனது உடுப்பைக் கழற்றிவிட்டுப் பலமாகத் தாக்கினார்கள். பின்னர் மகான் வீதியில் நின்ற இராணுவ அதிகாரி ஒருவரிடம் ஒப்படைத்தனர். அவர் கொச்சைத் தமிழில் பேசினார்.

அடுத்த பக்கம் திரும்பிப் பார்க்குமாறு கூறிவிட்டு அவர் பல தடவைகள் சுட்டார். எனினும் எனக்குச் சூடு எதுவும் படவில்லை. நான் திரும்பிப் பார்த்த போது அவர் சிரித்தார். கட்டப்பட்ட எனது கைகளை அவிழ்த்துவிடுமாறு சிப்பாய்களுக்குக் கூறினார். எனினும் சில நிமிடநேரத்தில் அவர் உடுத்துறைப் பக்கமாக டிரக்கில் சென்று விட்டார்.

அவர் சென்ற பின்னர் அங்கு நின்ற சிப்பாய்கள் மீண்டும் என் கைகளைக் கட்டிவிட்டுப்பலமாகத் தாக்கினார்கள். சிமெந்துச் சுவரில் எழுதப்பட்டிருந்த ''மகான் வீதி'' என்ற வாசகத்தை நாக்கினால் நக்கி அழிக்குமாறு கூறித் தாக்கினார்கள்.

அந்தப் பகுதியில் இருந்த வீடுகளின் கூரைத் தகடுகளை கழற்றி வீதிகளில் அடுக்கியதை நான் பார்த்தேன். பல வீடுகளை உடைத்துப் பல பெறுமதியான பொருள்களை எடுத்து வந்தும் வீதியோரங்களில் வைத்தனர்.

உடுத்துறைப் பக்கமாக இருந்து வந்த உழவு இயந்திரத்தில் கூரைத் தகடுகளும், வீட்டுப் பொருள்களும் நிறைய இருந்தன. அவற்றுடன் ''மகான் வீதி''ப் பகுதியில் அடுக்கி வைத்திருந்த பொருள்களையும் ஏற்றினர்.

என்னையும் கை கட்டப்பட்ட நிலையில் உழவு இயந்திரக்குள் தூக்கிப் போட்டனர். அதிகாரி அங்கு வந்ததும் சிங்களத்தில் ஏதோ சொன்னார். உடனே என்னைக் கீழே தூக்கி வீசினார்கள்.

அதிகாரியும், உழவு இயந்திரமும் போன பின்னர் அங்கு நின்ற சில சிப்பாய்கள் மீண்டும் என்னைத் தாக்கினார்கள். நான் மயக்கமுறும் வரை தாக்கினார்கள். நீண்ட நேரத்தின் பின் சுயநினைவு வந்தது. அப்போது ஒருவரையும் காணவில்லை. நடக்க முடியாத நிலையிலும் எனது சாரத்தைத் தேடி எடுத்து உடுத்திக்கொண்டு, மெது மெதுவாக மருதங்கேணிப் பக்கம் வந்து சேர்ந்து, அங்கிருந்த சிலரின் உதவியுடன் குடும்பத்தவரிடம் சென்றேன்.

என்னைத் தாக்கியவர்களில் ஒருவர் ''நான் கழுவாஞ்சிக்குடித் தமிழனடா'' என்று சொல்லிக்கொண்டே தாக்கினர். — என்று கூறி முடித்தார். (அ-144)

## சயனைட்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
கிராமங்களை அடுத்துள்ள பகுதிகளிலும் பொலீஸார் தீவிர தேடுதல் நடத்தி வருகின்றனர்.

ராஜீவ் காந்தி கொலை பற்றி விசாரித்து வரும் விசேட புலனாய்வுப் பொலீஸார் அக்கிராமங்களில் முகாமிட்டுள்ளனர் என்று இந்திய வானொலி தெரிவித்தது.

ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட ஐந்து பேரும் புலனாய்வுப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

ஆகஸ்ட் 2 ஆம் திகதி பெங்களூர் நகரில் இடம் பெற்ற தேடுதலின் போது மூன்று ஈழத்தமிழர்கள் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டனர் என்பது தெரிந்ததே. (முன்வர் வந்த செய்தி மூன்றாம் பக்கத்தில்) (உ-எ-த)

## மயிரிழையில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
சாதுர்யமாகத் தப்பிக்கொண்டார்.

பின்னர் அவர் அதே மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் வந்து இங்குள்ள நிலைமைகளை அறிந்து கொண்டு கொழும்பு திரும்பினார்.

இதேவேளை லண்டனில் இருந்து வெளிவரும் ''டெய்லி ரெலிகிராப்'' பத்திரிகையைச் சேர்ந்த இருவர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். றொபேர்ட் அடம்ஸ், நிக்கலஸ் போமான் ஆகிய அவர்கள் இருவரும் விடுதலை புலிகள் பிரமுகர்களைச் சந்திக்க முயற்சித்து வருகின்றனர். [அ-3]

# மரண அறிவித்தல்

## துரைச்சாமி சாந்தராசா

வேலணை மேற்கு, 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த துரைச்சாமி சாந்தராசா [முன்னாள் ஸ்ரீரமணன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், காலி] 18 - 8 - 1991 இல் காலமாகிவிட்டார். இவர் துரைச்சாமி-அமராவதியின் கனிஷ்ட புதல்வரும், செல்லத்துரை-இலட்சுமியின் அன்பு மருமகனும், இராசலெட்சுமியின் அருமைக் கணவரும், ஸ்ரீரமணன், குட்டி ரமணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று 19-8-1991 இல் தகனக் கிரியைகளுக்காக வேலணை அம்பலவி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
து. தியாகேஸ்வரன்.
(சகோதரன்)

(17844)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 203/6 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org